நிறுவனத்தின் பெயர்	:	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்	:	77

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 77

அரச கணக்குகள் பற்றிய செயற்குழு

உள்ளடக்கம

தொடர் இலக்கம்.	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்	பக்க இலக்கம்
1.	உள்நாட்டு இறைவரித் திணைக்களம்	1-20

பெயர் : உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. : 77

விசாரணை செய்யப்பட்ட திகதி : 2022 நவம்பர் 28

நிலையியல் கட்டளை இலக்கம் *119(4)* இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை சமர்ப்பித்தல்

<table>
<tr><th></th><th>அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்</th><th>நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/ தற்போதைய நிலைமை.</th></tr>
<tr><td>01</td><td>
<u>Legacy கணனி முறைமைக்கு உரியதாக, மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டிப் பெறுமதி</u>

Legacy கணனி முறைமைக்கு உரியதாக, மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டிப் பெறுமதியான ரூபா. 261,925,187,280 இல் ரூபா. 189,748,978,400 அதாவது 72% அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டியாக இனங்காணப்பட்டிருத்தல் மற்றும் அறவிடத்தக்க வருமானமான ரூபா. 72,176,208,180 நிலுவை வரி மற்றும் தண்டத்தொகை இது வரை அறவிடப்படலாம்.

Legacy கணனி முறைமைக்கு உரியதாக, அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அந்த நிலுவை வருமான வரி, வரி மேன்முறையீட்டுச் செயற்பாட்டின் (Tax Appeal Process) எந்தக் கட்டங்களினுள் (Stages) எந்த அளவுகளில் காணப்படுகின்றன என்பது தொடர்பான விரிவான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு முன்னர் நடாத்தப்பட்ட கணக்குக் குழுவில் உத்தரவிடப்பட்ட போதிலும், இது வரையில் அது தொடர்பான தகவல்கள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படவில்லையென குழுவில் வெளிப்படுத்தப் பட்டது.

தற்சமையம் Legacy கணனி முறைமை மூடப்பட்டு (Closed) 7 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அந்த முறைமைக்கு உரியதாக அறவிடத்தக்க வருமானமான ரூபா.72,176,208,880 நிலுவை வரி மற்றும் தண்டத்தொகை இது வரை அறவிடப்படவில்லையென குழுவில் தெரியப்படுத்தப்பட்டது.
</td><td>
2022.06.30 ஆம் திகதியில் Legacy கணனி முறைமைக்குரிய மொத்த நிலுவை வரி ரூபா. 261,925,187,281.00 தொகை 2023.12.31 ஆம் திகதியாகும் போது ரூபா. 209,936,351,221.00 வரை குறைவடைந்துள்ளது. அதாவது Legacy கணனி முறைமைக்குரிய மொத்த நிலுவை வரி ரூபா. 51,988,836,060.00 தொகை 2023.12.31 ஆம் திகதியாகும் போது குறைக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><th></th><th>மொத்த நிலுவை வரி மற்றும் தண்டம்</th><th>தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி மற்றும் தண்டம்</th><th>அறவிடத்தக்க வரி மற்றும் தண்டம்</th></tr>
<tr><td>2022. 06.30</td><td>261,925,187,281</td><td>189,748,978,401</td><td>72,176,208,880</td></tr>
<tr><td>2023 12.31</td><td><u>209,936,351,221</u></td><td><u>159,645,625,334</u></td><td><u>50,290,725,887</u></td></tr>
<tr><td>சீராக்கம் செய்தல்</td><td><u>51,988,836,060</u></td><td><u>30 ,103,353,067</u></td><td><u>21,885,482,993</u></td></tr>
</table>

Legacy கணனி முறைமைக்கு உரிய 2023.12.31 ஆம் திகதிய C 49 அறிக்கையின் பிரகாரம்.
• அறவீடு செய்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலுவை வரி மற்றும் தண்டத்திலிருந்து ரூபா. 1,909,015,748.58 வரி மேன்முறையடுச் சந்தர்ப்பத்தில் காணப்பட்டது.
• அறவீடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலுவை வரி மற்றும் தண்டத்திலிருந்து ரூபா. 11,690,671,595.79 வரி மேன்முறையீட்டு செயற்பாட்டில் CGIR Hearing சந்தர்ப்பத்தில் காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளதோடு,
• வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினுள் மேன்முறையீட்டு மட்டத்தில் காணப்படுகின்ற நிலுவை வரி மற்றும் தண்டத் தொகை ரூபா. 52,965,012,547.01 ஆகும்.

மேலும், Legacy கணனி முறைமைக்குரிய நிலுவை வரியை அறவிடல் அலுவல்களுக்குரிய திருத்திய மதிப்பீடு வழங்கல், மீள எதிரீடு செய்தல், கொடுப்பனவு மாற்றம் செய்தல் ஆகிய பணிகள் Legacy கணனி முறைமை மூலம் ஆற்றப்படுகின்றது. அதற்கமைய Legacy கணனி முறைமை மூடப்பட்டுள்ளதென்ற கூற்று சரியானதல்ல என்பதோடு மேற்படி காலப்பகுதியினுள் நிலுவை வரி அறவிட்டுக் கொள்வதற்காக முறைமை தொழிற்படு நிலையில்
</td></tr>
</table>

		காணப்படுதல் வேண்டும்.
02	**<u>RAMIS கணனி முறைமைக்குரியதாக மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டிப் பெறுமதி</u>** RAMIS கணனி முறைமைக்குரியதாக மொத்த நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டிப் பெறுமதியான ரூபா. 512,032,669,338 இல் 75% அதாவது ரூபா. 382,808,023,020 அறவீடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட வரி, தண்டம் மற்றும் வட்டியாக ரூபா. 129,224,646,318 அறவிடத்தக்க வரி, தண்டம் மற்றும் வட்டியென இனங்காணப்பட்டுள்ளது.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிலுவை வரியை அறவிட்டுக் கொள்வதற்காக நிலுவை வரி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர் நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மொத்த நிலுவை வரித் தொகையை ஒரே தடவையில் செலுத்துவதற்கு அசௌகரியங்கள் உள்ள வரி செலுத்துநர்களுக்கு கொடுப்பனவுத் திட்டம் வழங்கப்படும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களின் போது வங்கிக் கணக்கு தடை செய்தல் மற்றும் ஏனைய மூன்றாம் தரப்பினரிடமிருந்து அறவிடுதல் என்பன மேற்கொள்ளப்படும். மேற்படி நடவடிக்கைகள் ஊடாக

		அறவிட்டுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களின் போது நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்படும். மேலும் வரி செலுத்துநரினால் முன்வைக்கப்படுகின்ற ஆட்சேபணைகளை தீர்த்தல் ஊடாக கோப்பின் ஏனைய வரிக் காலப்பகுதியொன்றின் அல்லது வரி வகையொன்றில் உள்ள மீளக்கொடுப்பனவை எதிரீடு செய்தல் அல்லது கொடுப்பனவு மாற்றம் செய்தல் மூலம் நிலுவை வரி மீதி சீராக்கம் செய்யப்படும். 2021 இன் 18 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் நிலுவை வரி பதிவழித்தல் மூலமும் நிலுவை வரி மீதி குறைடைந்துள்ளது. 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரை திணைக்களத்தின் RAMIS கணனி முறைமைக்குரிய நிலுவை வரி பின்வருமாறு குறைக்கப்பட்டுள்ளது. 2023.12.31 ஆம் திகதியில் நிலுவை வரி சேகரித்தல் - 78,384,988,307.57 நிலுவை வரி பதிவழித்தல் - 10,653,060,245.96 மொத்தம் - 89,038,048,553.40
	RAMIS கணனி முறைமையைப் பேணிச் செல்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 90 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாக மற்றும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அலுவலர்களுக்காக மாதாந்தம் ரூபா 3.091 மில்லியன் கொடுப்பனவு செய்யப்படுவதாகவும் ஏற்கனவே அதற்காக ரூபா. 214,881 இற்கு கிட்டிய தொகையொன்று கொடுப்பனவு செய்யப்படுவதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.	RAMIS கணனி முறைமையின் பிரதான மொடியுள் (CORE Modules) 21 மற்றும் ஏனைய மொடியுள் (Non - CORE Modules) 7 ஆகியவற்றை உள்ளடக்கிய தகவல் முகாமைத்துவ முறைமை ஒன்றாகும். இந்த முறைமையை உருவாக்குவதற்காக சேவை வழங்குநர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டதோடு அந்தச் சேவை வழங்குநருக்கு உதவுவதற்காக அலுவலர் சபையொன்றும் நியமனம் செய்யப்பட்டது. இந்த அலுவலர் சபையின் கடமைகள் யாதெனில், முறைமையை உருவாக்குவதற்குத் தேவையான தகவல்களை சேவை வழங்குநருக்கு வழங்குதல், அந்த தகவல்களை அடிப்டையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்ற முறைமையின் பிழையற்ற தன்மையை பரீட்சித்தல், முறைமை அலுவலர்களுக்கு விடுவிக்கப்பட்ட பின்னர் அதனை இற்றைப்படுத்தல் அவசியமெனில் சேவை வழங்குநருக்குத் தெரிவித்து அதனை இற்றைப்படுத்தல் மற்றும் முறைமையை மேம்படுத்தல் அவசியமெனில் அதற்காக தலையீடு செய்தல் என்பனவாகும். இந்த அலுவலர் சபைக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்களில் இருந்து வரி தொடர்பான அறிவுள்ள மிகப்பொருத்தமான அலுவலர்கள், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்டனர். அதற்கமைய RAMIS முறைமையைப் பேணிச்செல்வதற்காக அலுவலர்களுக்குச் செய்யப்பட்ட சகல கொடுப்பனவுகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் நிதி அமைச்சின் உரிய அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
	அதேபோன்று 2016ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய வரித் திருத்தங்களுக்கு இணங்கியதாக, RAMIS கணனி	மேலும், இந்தக் கொடுப்பனவுகள் கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ஆகும் என்பதோடு RAMIS முறைமையை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் அலுவல்கள் போன்ற கட்டாய சேவைகளை வழங்கியமைக்காக கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.

	முறைமையை இற்றைப்படுத்தாமை (Update) தொடர்பாக மற்றும் RAMIS மற்றும் Legacy கணனி முறைமைக்குரியதாக காணப்படுகின்ற அறவிடப்படவேண்டிய மொத்த வருமானமான ரூபா. 201 பில்லியனுக்கு கிட்டிய நிலுவைத் தொகை அறவிடல் தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் அது தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகள் என்ன என்பது தொடர்பில் செயற்குழு பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரிடம் (க.அ) உசாவியது. வரி செலுத்துவதற்காக தாபிக்கப்பட்ட சுய மதிப்பீட்டு அடிப்படையின் கீழ் வரிசெலுத்துநர் சமர்பிக்கின்ற விபரத்திரட்டுடன் இணங்க முடியாத சந்தர்ப்பங்களில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மீண்டும் ஆராய்ந்து பார்க்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை விநியோகம் செய்யப்படுவதாகவும், அதன் பின்னர் பெரும்பாலும் அது மேன்முறையீட்டு செயன்முறைக்கு உட்படுவதாகவும் க.அ. தெரிவித்தார். அந்த மேன்முறையீட்டை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினுள் தீர்த்துக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களின் போது வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கும், அதன் பின்னர் நீதிமன்றத்திற்கும் ஆற்றுப்படுத்தப்படுவதாக குழுவில் வெளிப்படுத்தப் பட்டது. அவ்வாறு அறவிடுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலுவை வரிகளில் ஒரு பகுதி நீதிமன்றத்தினால வழங்கப்படுகின்ற தீர்ப்பின் பிரகாரம் மீண்டும் அறவிடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதெனவும் க.அ.தெரிவித்தார். அதன் பிரகாரம் Legacy கணனி முறைமைக்குரியதாக காணப்படுகின்ற நிலுவை வரி 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் தற்சமையமாகும் போது 50% இனால் குறைக்கப்பட்டுள்ளதாக க. அ.தெரிவித்தார். வியாபாரிகள் அவர்களின் வருமான உழைப்பு மீது இந்த நிலுவை வரி அல்லது நடப்பு வருடத்திற்கான வரி செலுத்தப்படுவதாகவும், சில சந்தர்ப்பங்களில் அந்த நிலுவை வரி தவணை அடிப்டையில் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமையால் அறவிடப்படுகின்ற காலப்பகுதியில் சில தாமங்கள் காணப்படுவதாக க.அ. மேலும் தெரிவித்தார். **பரிந்துரைகள்/ கட்டளைகள்** RAMIS மற்றும் Legacy கணனி முறைமைக்குரியதாக ஒவ்வொரு நிறுவனங்கள் ஊடாக அறவிடப்படவேண்டிய நிலுவை வரி அறவிடும் வழிமுறை (தவணைக் கட்டண முறையில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளும் உள்ளடங்கலாக) மற்றும் அந்த நிறுவனங்குரியதாக மொத்த நிலுவை வரி முழுமையாக அறவிட்டு முடிக்கின்ற காலப்பகுதி உள்ளடக்கப்பட்ட விரிவான விபரமொன்றை ஒரு மாத காலப்பகுதியினுள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழுவினால் பி.க. அ /க.அலுவலர்களுக்கு கட்டளையிடப்பட்டது. RAMIS மற்றும் Legacy கணனி முறைமைக்குரியதாக	

	அறவீடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலுவை வரி, தண்டம் மற்றும் வட்டி காணப்படுகின்ற நிறுவனங்கள் தனித்தனியாக மற்றும் அந்த நிதித்தொகை தனித்தனியாகவும் காட்டப்படுகின்ற விரிவான ஓர் அறிக்கையை ஒரு மாதத்தினுள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழுவினால் பி.க. அ/ க. அலுவலருக்குக் கட்டளை இடப்பட்டது. RAMIS மற்றும் Legacy கணனி முறைமைக்குரியதாக வரி மற்றும் நிலுவை வரியை அறவிடமுடியுமான வழிமுறைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	
03	**<u>வரி மேன் முறையிட்டுச் செயற்பாடுகள்</u>** வரி மேன்முறையீடு, மேன் முறையீட்டு நீதிமன்றம் அல்லது உயர் நிதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுமிடத்து அவற்றைத் தீர்ப்பதற்காக நீண்டகாலம் எடுக்கின்ற காரணத்தால் வரி மேன் முறையீடுகளுக்குரிய நீதிமன்ற நடவடிக்கைளை வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைத்தல். முன்னைய கணக்குக் குழு கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதாகவும், வரி தொடர்பான வழக்குகளுக்காக தனியான நீதிமன்ற முறைமையொன்று இல்லாத காரணத்தால, அவ்வாறான நீதிமன்ற முறைமையொன்றை உருவாக்குதல் தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளர் அவர்களுடன் கலந்துரையாடப்பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. **<u>பரிந்துரைகள்/ கட்டளைகள்</u>** வரி மேன்முறையீடுகளை வினைத்திறன் கொண்டதாக தீர்த்துக்கொள்வதற்காக நீதிமன்ற முறைமையில் காணப்படுகின்ற வழிமுறையை வலுப்படுத்துவதற்காக தனியான நீதிமன்றம் (Separate Tax Court) ஒன்றை உருவாக்குவதன் தேவைப்பாடு குழுவில் வலியுறுத்தப்பட்டதோடு அதற்குத் தேவையான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட முன்மொழிவொன்றை குழுவிற்கு இரண்டு வாரங்களினுள் சமர்ப்பிக்குமாறு குழுவினால் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது. அந்தத் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் அரச கணக்குகள் தொடர்பான குழுவினால் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான முன்மொழிவுகளை கௌரவ அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. இதற்குரிய பின்வரும் முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்ட பதில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு.02) • நீதிச் சட்டகம் ஒன்றையும் சூழலொன்றையும் உருவாக்குதல். • வரி விடயம் தொடர்பான சிறந்த புரிந்துணர்வுள்ள நீதிபதிகளை நியமித்தல். • வழக்கை விசாரணை செய்து தீர்ப்பை வெளியிடுவதற்கு குறித்துரைக்கப்பட்ட காலச் சட்டம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதனை	

	நடைமுறை ரீதியாக ஏற்புடையதாக்கிக்கொள்ள முடியுமா எனப் பரீட்சிப்பதற்காக நிதியமைச்சின் செயலாளரை / சட்டமா அதிபர் திணைக்களத்தை உசாவுதல். • நீதிச் சபைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.	உரிய பிரிவுகளுடன் கலந்துரையாடி தேவையான விதத்தில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு வருகின்றது
04	**பெறுமதி சேர் வரி (VAT) அறவிடல்** அறவிடமுடியுமான மொத்த நிலுவை வரிப் பெறுமதியில் ரூபா.116,350,240,272 (58%) பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் அறவிடப்படுகின்ற பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடங்குவதோடு திணைக்களத்தினால் அந்த வரி கால அடிப்படையில் அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்படாமை. குறித்த நிலுவை வரிப் பெறுமதியினுள் ஐந்து அரச நிறுவனங்களினால் மூன்றாம் தரப்பிடமிருந்து பண்டங்கள் சேவைகள் மீது அறிவிடப்பட்டு அவ்வாறு திணைக்களத்திற்கு அனுப்பப்படாத பெறுமதி சேர் வரி ரூபா.193,828,962 ஆகும் என்பதோடு அந்தத் தொகையை சேகரிக்கின்ற தரப்பினருக்கு முறையற்ற பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தினால் அதற்காக வினைத்திறனும் விளைதிறனும் கொண்ட நடவடிக்கையை எடுக்கப்படவில்லையெனவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. **பரிந்துரைகள்/ கட்டளைகள்** அந்த பெறுமதிசேர் வரி (VAT) திணைக்களத்திற்கு அறவிட்டுக்கொள்வதற்கு உரிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் வரி அறவிடப்படுகின்ற வழிமுறை உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்றை குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறும் குழுவினால் த.க.அ. / க.அ. இற்கு உத்தரவிடப்பட்டது. இது தொடர்பான விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்குகிறேன். 2023/12/31 ஆம் திகதியில் உள்ளவாறான முன்னேற்றம் இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 01)
05	**வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) உரிய முறையில் செயற்படாமை** உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சொந்தமான, வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமைக்கு (RAMIS) ரூபா.10 பில்லியனுக்கு அண்மித்த தொகை செலவிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை உரிய அடிப்படையில் செயற்படாமை. நிதி அமைச்சு மற்றும் சிங்கப்பூர் அரசாங்கத்திற்கிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்குகமைய சிங்கப்பூர் அரசின் வெளிநாட்டு அமைச்சின் கீழுள்ள Singapore Corporation Enterprise (SCE) நிறுவனத்திற்கு RAMIS முறைமையை தாபிப்பதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாவும். இதன்	இந்த அவதானிப்பு சரியானது அல்ல. 2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) 2016 ஒக்தோபர் மாதம் முழுமையான தொழிற்படு நிலைமைக்குப் மாற்றப்பட்டது. பின்னர் 2017 ஒக்தோபர் மாதத்தில் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு

	செயற்பாட்டு பகுதிக்காக உள்நாடு இறைவரித் திணைக்களம் தொடர்புபட்டதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இங்கு மென்பொருள் விருத்தி (Software Development) நடவடிக்கை எடுப்பது வரி நிருவாகம் தொடர்பில் மென்பொருள் விருத்தி செய்கின்ற NCS என்ற சிங்கப்பூர் கம்பனியினால் ஆகுமென குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.	இறைவரிச் சட்டம் அறிமுகம் செய்யப்பபடது. அது 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட்டது. அந்தச் சட்டம் அதுவரை காணப்பட்ட 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க சட்டத்தைவிட கட்டமைப்பு ரீதியாக மாற்றமான ஒரு சட்டமாக காணப்பட்டமையினால் அதுவரை மேறகொள்ளப்பட்ட RAMIS புதிய சட்டத்தின் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகப் பொருந்தவில்லை. அதற்கமைய RAMIS இல் முழுமையான கட்டமைப்பு மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதோடு அதற்கமைய RAMIS 2.0 உருவாக்கத்தின் தேவைப்பாடு ஏற்பட்டது. அதற்கான அமைச்சரவை அனுமதி 2018 நவம்பர் இறுதிப்பகுதியில் கிடைக்கப்பெற்றுள்ளதோடு RAMIS 2.0 முன்மொழிவு மற்றும் விலைக்கோரல் செய்யப்பட்டு அது மதிப்பிடப்பட்ட பின்னர் மீண்டும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு அதற்கான அனுமதி 2020 பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்டது.
	2014 ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட RAMIS கருத்திட்டத்திற்காக 2022ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் முடிவடையும் போது 8.8 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளதாகவும். 2015 ஆம் ஆண்டில் RAMIS முறைமையில் Web Portal உருவாக்கப்பட்டதாகவும் மற்றும் பலகட்டங்கள் செயற்பட்ட இந்தக் கருத்திட்ட பணிகள் 2016 ஒக்ரோபர் மாதம் நிறைவு செய்யப்பட்டதாகவும் க.அ. தெரிவித்தார். ஒப்பந்தப் பிரகாரம் நான்கு (04) வருடகாலப்பகுதிக்கான தொழில்நுட்ப இற்றைப்படுத்தல் மற்றும் பரமரிப்புச் சேவை சிங்கப்பூர் கம்பனியினால் செய்யப்படவேண்டுமெனவும் குழுவில் வெளிப்படுத்தப் பட்டது. இருப்பினும் 2017 இல் நிறைவேற்றப்பட்ட 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக RAMIS முறைமையில் புதிய கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டமையால் இந்த முறைமையின் ஆலோசனை (Third Party Quality Assurance) ஆக செயற்படுகின்ற மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் கலந்துரையாப்பட்டதோடு அந்த முறைமை அடுத்த கட்டம் (Next Version), RAMIS 2.0 ஆக விருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதாக க.அ. தெரிவித்தார்.	மேலும் 2020 மார்ச் மாதம் ஆகும்போது COVID தொற்றுநோய் நிலைமை விரைவாக பரவியதோடு அதன் காரணமாக இலங்கை சிங்கப்பூர் உள்ளிட்ட உலகில் பெரும்பாலான நாடுகள் மூடப்பட்டன. இக் காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் பணியாட்குழுவினர் பணிக்கு அழைத்தல் மட்டுப்படுத்தப்பட்டது. ஆதலால் RAMIS 2.0 மேம்படுத்தத் தேவையான அனைத்து அலுவல்களையும் இணையவழி முறைமையூடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது பொதுவான வழிமுறைக்கு அமைய சேவை வழங்குநர் மற்றும் சேவைபெறுநர் நேரடியாக கலந்துரையாடி தேவையான தகவல்களை சேகரிப்பதை விட பாரிய அசௌகரியங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பணியாகும். இங்கு தொலைபேசி முறைமை தடைப்படல், மின்சாரம் தடைப்படல், இருதரப்பு அலுவலர்களுக்கு COVID தொற்று ஏற்படல் போன்ற விடயங்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக காலம் கருத்திட்ட விருத்திக்கு ஏற்பட்டதோடு அலுவலர்களினால் இரவு பகல் பாராமல் உரிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அர்ப்பணிப்புக்களின் பிரதிபயனாக அபிவிருத்தி அலுவல்களை 2022 மே மாதமாகும்போது நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டது. மேலும் நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாடின்மை எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் அமைதியின்மை ஏற்பட்டது. அக் காலப் பகுதியில் ஏற்பட்ட வெளிநாட்டுச் செலாவணி நிலுவை காரணமாக 2021 வருடம் தொடக்கம் செலுத்தப்பட வேண்டியிருந்த பட்டியல்கள் செலுத்தப்படாமை மற்றும் நாட்டில் வங்குரோத்து நிலை பிரகடனப் படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் தடைப்பட்ட RAMIS 2.0 அபிவிருத்தி அலுவல்கள் NCS நிறுவனத்தால் 2022 யூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டது.
	இந்த கருத்திட்டத்திற்கான அனுமதி கிடைத்த பின்னர் சட்டமா அதிபர் அறிவுறுத்தல் பெறப்பட்டதாகவும் காணப்பட்ட கோவிட் தொற்று நிலைமை காரணமாக கருத்திட்டத்தின் ஒப்பந்தம் 2020 யூலை மாதத்தில் கைச்சாத்திடப்பட்டதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்த முறைமையின் கொடுப்பனவு அலுவல்கள் கட்டங்கள் அடிப்படையில் செலுத்தும் முறைமையூடாக (Milestone Payment System) இடம்பெறுவதாகவும் Invoice வழங்கப்பட்ட போதிலும் நாட்டில் காணப்பட்ட டொலர் பிரச்சனை காரணமாகவும் சிங்கப்பூர் டொலர் 9.1 மில்லியன்	பின்னர் COPA குழுவின் தலையீட்டினால் குறித்த நிலுவைத்தொகை நிதியமைச்சினால் செலுத்தி முடிக்கப்பட்டதோடு 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் அபிவிருத்தி அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய தற்போது புதிய அபிவிருத்தி அலுவல்கள் முடிக்கப்பட்டுள்ளதோடு ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட 2018/2019 வரி மதிப்பீட்டாண்டிற்காக விநியோகிக்கத்தக்கவாறு முறைமை நிகழ்நிலைப் படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று 2019/2020, 2020/2021, 2021/2022 ,2022/2023 வரி

	(6.6 மில்லியன் அமெரிக்க டொலர்) தொகை இன்னும் நிலுவையாகுமென க.அ. தெரிவித்தார். மேலும் இலங்கை கடன் தரப்படுத்தலில் கீழ்இறங்குதல் (Downgrade) காரணமாக சிங்கப்பூர் கம்பனியுடன் கடன்கொடுக்கல் வாங்கல்களில் சிக்கல் ஏற்பட்டதால் அதற்கமைய 2022 யூன் மாதத்தில் கருத்திட்டத்தை மேற்கொள்ளும் செயற்பாடு தடைப்பட்டதால் மற்றும் முறைமையின் பராமரிப்பு அலுவல்கள் மாத்திரம் சிங்கப்பூர் கம்பனியினால் மேற்கொள்ளபடுவதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. புதிய வரிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் 2018/2019, 2019/2020, 2020/2021 மதிப்பீட்டாண்டுகளுக்காக வரி செலுத்துநர்கள் வழங்கியுள்ள விபரத்திரட்டுக்கள் முறைமையினுள் செயற்படுத்தப்படுவதாகவும் (Processing) சிக்கல்கொண்ட விபரத்திரட்டுக்கள் காணப்படுமாயின் அவற்றுக்குரிய புதிய மதிப்பீடுகள் விநியோகிக்கும் செயற்பாட்டுக்குரிய பணிகள் ஏற்கனவே தடைப்பட்டுள்ளதாகவும் RAMIS முறைமையின் தற்போதைய செயற்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது க.அ. தெரிவித்தார். வருமானச் சட்டங்கள் காலத்திற்குக் காலம் வேறுபடமுடியும் என்பதால் மற்றும் அதற்கிசைவாக முறைமையிலும் இற்றைப்படுத்தல் (Update) மற்றும் மாற்றங்கள் செய்யவேண்டும் என்பதால் அவ்வாறு செய்யப்படுகின்ற மாற்றங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் ஒப்பந்தத்தைக் கையேற்றுக் கொண்ட கம்பனியினால் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆரம்ப ஒப்பந்தத்தில் நிபந்தனை உள்ளடக்கப்படாதிருந்ததா என குழுவில் உசாவப்பட்டது. புதிய வரி முறைமையொன்று அறிமுகம் செய்யப்பட்டபோது "Change Request Process" வழிமுறையூடாக முறைமையில் மாற்றங்கள் செய்யமுடியுமெனவும் 2017 இல் அறிமுகம் செய்யப்பட்ட புதிய வரிச்சட்டத்தில் காணப்பட்ட கட்டமைக்கப்பட்ட மாற்றங்கள் காரணமாக முறைமையில் தனியான ஒரு கட்டமாக (Version) அபிவிருத்தி செய்ய நேரிட்டதாக க.அ. தெரிவித்தார்.	மதிப்பீட்டாண்டுகளுக்காக விநியோகிக்கத் தக்கவாறு முறைமையில் மாற்றங்களைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கோரிக்கை முறைமை விருத்தியாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2018/2019, 2019/2020, 2020/2021 வரி மதிப்பீட்டாண்டுகளில் அரச வருவாய் இழக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக காலம் முடிவடைவதற்கு முன்னர் மாற்று வழிமுறையொன்றின் கீழ் உரிய காலத்தில் மேலதிக மதிப்பீடொன்றை வழங்குவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தேவையான அலுவல்கள் எடுக்கப்பட்டுள்ளதோடு அதற்கமைய வரி வருமானம் இழக்கப்படுதல் தவிர்க்கப்பட்டுள்ளது. வருமான வரிச் சட்டங்களில் காலத்துக்குக் காலம் செய்யப்படுகின்ற மாற்றங்களுக்கு இசைவாக முறைமையை மேம்படுத்துவதற்கான நிபந்தனைகள் ஆரம்ப ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்தோடு அது (Change Request Process) முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படலாம்.
06	<u>**அரச நிறுவனங்களை RAMIS முறைமையுடன் இணைத்தல்**</u> RAMIS முறைமையுடன் இணைக்கப்பட வேண்டிய 29 நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் தற்போது கட்டாய 6 அரச நிறுவனங்கள் மாத்திரம் RAMIS முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார். இவ்வாறு RAMIS முறைமை மற்றும் நிறுவனங்களை இணைக்கும் போது அவ்வாறு இணைகின்ற ஏனைய நிறுவனத்தையும் தன்னியக்க முறைமை (Automated System) காணப்படவேண்டுமெனவும் அந்த முறைமைகளுக்கிடையில் தரவு இணைப்பு (Link) செய்வதற்காகப் பொது இலத்திரணியல் இனங்காணல் இலக்கமொன்று (Unique Digital ID) காணப்படல் வேண்டுமெனவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும் அரச நிறுவனங்களின்	ஏற்கனவே தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதோடு கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாயமான அரச நிறுவனங்கள் 06 RAMIS முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. 1. மக்கள் வங்கி இலங்கை வங்கி } வரி செலுத்துதல் 2. கம்பனிகள் பதிவா[illegible] 3. நிதி அமைச்சு 4. சுங்கத் திணைக்களம் 5. இலங்கை கிளியர் தனியார் கம்பனி ஏனைய நிறுவனங்களை RAMIS முறைமையுடன் இணைப்பதற்காக தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை என்பதோடு அது தொடர்பில் உரிய

	தரவு இணைப்பு (Link)செய்வதற்காக அவ்வாறான பொது இனங்காணல் இலக்கமொன்று இல்லையென்பதால் தேசிய மட்டத்தில் காணப்பட்ட அவ்வாறான இனங்காணல் இலக்கமொன்றை அறிமுகம் செய்யும் தேவைப்பாடு மற்றும் அதனை உபயோகத்தில் வணிகக் கொடுக்கல் வாங்கல்களில் செயற்படுத்தும் ஆற்றல் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் தமது தரவு முறைமையினுள் வாகன உரிமையாளர்களின் NIC இலக்கத்திற்குப் பதிலாக வாகன செசி (Chasse) இலக்கத்தை பயன்படுத்துவதாகவும் அந்த இலக்கம் RAMIS முறைமையில் இல்லாத காரணத்தால் முறைமையோடு இணைப்பதில் (Link) சிக்கல் காணப்படுவதாக கணக்கீட்டு அலுவலர் இங்கு கருத்துதெரிவிக்கும்போது குறிப்பிட்டார். இருப்பினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பயன்படுத்துகின்ற TIN இலக்கம் (Taxpayer Identification Number) செயற்படுத்துகின்ற நிறுவனங்களில் (உதாரணம் - இலங்கை சுங்கத்தினால் ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளின் போது TIN இலக்கம் பயன்படுத்தப்படல்) தரவுகளை RAMIS முறைமையில் தன்னியக்கமாக சேகரிக்கப்படுவதாக க.அ.தெரிவித்தார். <u>**பரிந்துரைகள்/ கட்டளைகள்**</u> மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மற்றும் RAMIS முறைமையுடன் தொடர்புடைய ஏனைய உரிய நிறுவனங்கள், வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமையுடன் இணைக்கும் போது காணப்படுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமான முன்மொழிவுகளை ஒரு மாதத்தினுள் சமர்ப்பிக்குமாறு குழுவினால் பி.க.அ. / க.அ. அவர்களுக்கு உத்திரவிடப்பட்டது. **இது தொடர்பான பதில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 03)** — **மேலும், முன்னைய கணக்குக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிதியமைச்சின் மேலதிகச் செயலாளரின் தலைமையில் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் RAMIS** முறைமையுடன் தொடர்புடைய 29 நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அறிக்கை, செயலாற்றுகைக் குறிப்பு மற்றும் அதன் முன்னேற்றம் ஒரு மாத காலப்பகுதியினுள் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு குழுவினால் பி.க.அ. / க.அ. உத்திரவிடப்பட்டது. — **மேற்குறித்த RAMIS முறைமையுடன் தொடர்புடைய 29 நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் அறிக்கை, செயலாற்றுகைக் குறிப்பு சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.**	நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஏற்கனவே கீழேயுள்ள நிறுவனங்கள் RAMIS முறைமையுடன் இணைக்கும் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. 1. மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் 2. குடிவரவு குடியகழ்வு திணைக்களம் 3. மது வரித் திணைக்களம்
07	<u>**RAMIS கணனி முறைமையை முழுமையாக விரைவில் தொழிற்படு நிலைமைக்கு மாற்றியமைத்தல்**</u> **பரிந்துரைகள்/ கட்டளைகள்** RAMIS கணனி முறைமையை முழுமையாக விரைவில் தொழிற்படு நிலைமைக்கு மாற்றுவதற்காக RAMIS கணனி முறைமை தொடர்பில் கீழே	

	காட்டப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்றை ஒரு மாத காலத்தினுள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழுவினால் பி.க.அ. / க.அ. இற்கு உத்திரவிடப்பட்டது.	
	• RAMIS கணனி முறைமையை முழுமையாக தொழிற்படு நிலைமைக்கு மாற்றுவதற்காக செலவாகும் முழுமையான காலப்பகுதி	**RAMIS கணனி முறைமையை முழுமையாக தொழிற்படு நிலைமைக்கு மாற்றுவதற்காக செலவாகும் முழுமையான காலப்பகுதி.** சேவை வழங்குநருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய தற்சமயம் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க வரிச்சட்டத்தின் கீழான மாற்றங்களுக்கு பொருந்தக் கூடியவாறு RAMIS இல் செய்யப்பட வேண்டிய பிரதானமான மாற்றங்கள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 2018/2019 வரி மதிப்பீட்டாண்டிற்காக RAMIS முறைமை மூலம் மதிப்பீடுகளை விநியோகிக்க முடியும். தற்போது மாற்று வழி முறைமையின் கீழ் 2019/2020 தொடக்கம் 2021/2022 மதிப்பீட்டாண்டு வரை மதிப்பீடுகளை விநியோகிப்பதற்கு தேவையான பின்னணி வகுக்கப்பட்டுள்ளதோடு 2022/2023 வரி மதிப்பீட்டாண்டிற்காக விநியோகிப்பதற்குத் தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
	• RAMIS கணனி முறைமையை தொழிற்படு நிலைமைக்கு மாற்றியமைப்பதற்காக ஏதேனும் தடைகள் (Short Coming) காணப்படுமாயின் அது தொடர்பான தகவல்கள்	**RAMIS கணனி முறைமையை தொழிற்படு நிலைமைக்கு மாற்றியமைப்பதற்காக ஏதேனும் தடைகள் (Short Comings) காணப்படுமாயின் அது தொடர்பான தகவல்கள்** RAMIS கணனி முறைமையை தொழிற்படு நிலைமைக்கு மாற்றியமைப்பதற்காகக் காணப்பட்ட தடைகள் (Short Comings) நிதியமைச்சின் தலையீட்டின் மீது ஏற்கனவே தவிர்க்கப்பட்டுள்ளது. • தற்போது காணப்படுகின்ற மேம்படுத்தல்களுக்குரிய தடைகள் தொடர்பாக குழு அறிக்கைகள் மூலம் நிதியமைச்சு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
	• RAMIS கணனி முறைமையில் இறுதிக் கொடுப்பனவு செய்யப்பட்ட பின்னர் அதன் உரித்துரிமையை (Ownership) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கிடைக்கின்றதா என்பது	**RAMIS கணனி முறைமையில் உரித்துரிமை (Ownership) உள்நாட்டு இறைவரித் துணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அதன் பெற்றுக்கொள்வதற்கு செலவாகும் காலம் (Time Plan)**
	• RAMIS கணனி முறைமையில் உரித்துரிமை (Ownership) உள்நாட்டு இறைவரித் துணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அதன் உரித்துரிமையை பெற்றுக்கொள்வதற்கு செலவாகும் காலம் (Time Plan).	RAMIS முறைமையின் உரித்துரிமை ஏற்கனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் காணப்படுகின்றது. இருப்பினும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான பயிற்றப்பட்ட பணியாட்குழு (குறிப்பாக தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள்) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் இல்லையென்பதால் அதற்காக முறைமையின் உருவாக்குநர்களின் உதவியை பெற்றுக்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது.
	• RAMIS கணனி முறைமையினுள் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனில் அது தொடர்பான முன்மொழிவுகள்	**RAMIS கணனி முறைமையினுள் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனில் அது தொடர்பான முன்மொழிவுகள்**

	இதுதொடர்பான பதில் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (இணைப்பு 04).	வரி அடிப்படையை விரிவாக்குதல் மற்றும் அறிக்கை இணக்கப்பாட்டை அதிகரித்தல் மூலம் அரச வருமானத்தை அதிகரித்தல் ஆகிய விடயங்களை நோக்கும்போது E-Invoicing முறைமை மற்றும் Unique Digital ID முறை ஆகியவற்றை இலங்கையில் அறிமுகம் செய்தல் போன்றன செய்யப்பட்ட பின்னர் RAMIS முறைமையை அதனுடன் இணைப்பதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென சுட்டிக்காட்ட முடியும். • ஏற்கனவே RAMIS முறைமையின் குறைபாடுகள் மற்றும் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையொன்று நிதியமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
08	**<u>கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு ஒப்பந்தத் தகவல்களை வழங்காமை</u>** RAMIS கணனி முறைமையில் தொழில்நுட்ப இற்றைப்படுத்தல் மற்றும் 03 வருடங்கள் வரை பராமரிப்பு சேவை வழங்குதல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சிங்கப்பூர் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் தகவல்கள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த தகவல்கள் வழங்கப்படாமை. RAMIS கணனி முறைமையில் கொள்வனவை பேணி வருதல் தொடர்பில் செயலாற்றுகை கணக்காய்வு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதற்குத் தேவையான தகவல்கள் போதுமான அளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் குழுவில் தெரிவித்தார். சிங்கப்பூர் கம்பனியுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய ஏனைய மூன்றாம் தரப்பொன்றுடன் இந்த RAMIS கணனி முறைமைக்குரிய எழுத்தாவணங்கள் அல்லது தகவல்களைப் பரிமாறுக் கொள்வதெனில் ஏனைய தரப்பின் எழுத்து மூல இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளவேண்டுமென க.அ. தெரிவித்தார். அதற்கமைய கணக்காய்வாளரினால் இந்த ஒப்பந்தத் தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட சந்தர்ப்பத்தின் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களினால் குறித்த சிங்கப்பூர் கம்பனியிடம் இது தொடர்பாக உசாவியதாகவும் சில தகவல்களை வழங்குவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவிக்க வில்லையெனவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் கணக்காய்வாளரினால் போன்றே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினாலும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கோரப்பட்டுள்ளதென குழுவினால் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு அதன் சட்ட ரீதியான செல்லுபடித் தன்மை தொடர்பாக சட்டமாதிபரின் அபிப்பிராயத்தை உசாவுதல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இந்தக் கூட்டத்தின் போது செயற்குழுவினால் வழங்கப்பட்ட உத்தரவிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற பதில் அறிக்கைகள் தொடர்பாக திருப்தி அடைய முடியாதெனில் கணக்காய்வாளரினால் RAMIS முறைமை தொடர்பில் கொடுக்கல் வாங்கல் கணக்காய்வொன்றை (Transection Audit) மேற்கொள்வது அவசியமென	சட்டமா அதிபரின் அனுமதி சகிதம் சிங்கப்பூர் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய வேறு மூன்றாம் தரப்பொன்றுடன் RAMIS கணனி முறைமைக்குரிய எழுத்தாவணங்கள் அல்லது தகவல்களை பரிமாறிக் கொள்வதற்காக சிங்கப்பூர் கம்பனியின் எழுத்து மூல அனுமதி கிடைக்கவில்லை என்பதால் குறித்த ஒப்பந்தத்தின் பிரதியை கணக்காய்வாளருக்கு வழங்கமுடியாது போயுள்ளது. அவ்வாறு வழங்குவது ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவதாகும் என்பதோடு அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு எதிராக சிங்கப்பூர் கம்பனியினால் எதிர்கால சட்டரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதென சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலுவலர்களினால் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. • உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் CGIR /2022/28 ஆம் இலக்க 2022/08/08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட உசாவுதலுக்கான பதிலாக, சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் (சாயா சிறி நம்முணி) அவர்களின் 2023.01.30ஆம் திகதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "Given that the Singapore company has refused to give consent to disclosure as stated above, the possibility that such company may institute legal action does exist. The dispute resolution clause provides for arbitration in Hong Kong"

	குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது.	
09	**<u>மறுக்கப்பட்ட காசோலை மூலம் செலுத்தப்பட்ட வரி அறவிடுதல் அலுவல்கள் வினைத்திறன் கொண்டதாக இடம்பெறாமை</u>** மறுக்கப்பட்ட காசோலை மூலம் செலுத்தப்பட்ட வரி அறவிடுதல் அலுவல்கள் வினைத்திறன் கொண்டதாக இடம்பெறாமை மற்றும் காசோலைக்குப் பதிலாக வரி செலுத்துவதற்காக பொருத்தமான நிகழ்ச்சித் திட்டமொன்று இதுவரை மேற்கொள்ளப்படாமை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2022 யூன் 30ஆம் திகதியில் உள்ளவாறான Legacy மற்றும் RAMIS முறைமைகளுக்குரிய மறுக்கப்பட்ட காசோலைகள் பரிசீலனையின் போது I. 2022 யூன் 30ஆம் திகதியில் உள்ளவாறான Legacy மற்றும் RAMIS முறைமைகளுக்குரிய ரூபா.2,488,003,615 பெறுமதியான 4831 மறுக்கப்பட்ட காசோலைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. II. அந்த மறுக்கப்பட்ட காசோலைகளில் ரூபா.1,429,356,750 பெறுமதியான 3,817 காசோலைகள் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட பழைய காசோலைகளாகக் காணப்பட்டன. III. வரி செலுத்துநர்கள் பெறுமதி சேர் வரியாகச் சேகரிக்கப்பட்ட காசோலைகள் மூலம் செலுத்தப்பட்ட வரிகளுக்குரிய ரூபா.1,980,596,605 பெறுமதியான 3,471 காசோலைகள் மறுக்கப்பட்ட காசோலைகளாகக் காணப்பட்டதோடு அது மொத்த காசோலைகள் பெறுமதியில் 80% ஆகக் காணப்பட்டது. இவ்வாறு மறுக்கப்பட்ட காசோலைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை சிக்கல் மிக்க நிலைமையொன்றென குழுவினால் வலியுறுத்தப்பட்டதோடு காசோலை களுக்குப் பதிலாக வங்கிப் பிணைப்பத்திரங்கள் (Bank Guarantee) ஊடாக செலுத்துவது மிகவும் விளை திறன்கொண்டதெனச் சுட்டிக்காட்டப்பட்டது. குழுவின் கோரிக்கைமீது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2022/11/22ஆம் திகதி வரையான மறுக்கப்பட்ட காசோலை தொடர்பான ஆவணமொன்று க.அ. அவர்களால் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.	I. 2023/12/31ஆம் திகதியாகும் போது செலுத்தி தீர்க்கப்பட வேண்டியுள்ள மறுக்கப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 3,174 ஆகும் என்பதோடு அதன் பெறுமதி ரூபா. 1,948,707,727.85 ஆகும். II. இந்த மறுக்கப்பட்ட காசோலைகளில் ரூபா. 951,419,883.55 பெறுமதியான 2,516 காசோலைகள் மூன்று வருடத்திற்கு மேற்பட்ட பழைய காசோலைகளாகும். III. 2023/12/31 ஆம் திகதியாகும் போது வரி செலுத்துநர்களால் பெறுமதிசேர் வரி அடிப்படையில் சேகரித்துக் கொள்ளப்பட்டு காசோலை மூலம் செலுத்தப்பட்ட வரிகளுக்குரியதான ரூபா. 1,498,999,221.10 பெறுமதியான 2,223 காசோலைகள் மறுக்கப்பட்டுள்ளன. மறுக்கப்பட்ட காசோலைகளை அறவிட்டுக் கொள்ளல் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. • காசோலைக்குப் பதிலாக வங்கி வரைவு (Bank Draft) மூலம் கொடுப்பனவு செய்யும் போது அறவிடப்படுகின்ற கட்டணத்தை திருத்தும் சாத்தியப்பாடு தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களால் 2023/09/27 ஆம் திகதிய கடிதம் மூலம் மத்திய வங்கியின் அதிபதி அவர்களிடம் செய்யப்பட்ட விசாரணைக்காக 2024/01/17ஆம் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பதிலுக்கமைய இலங்கை மத்திய வங்கி அந்தக் கட்டணத்தை அறவிடுதல் தொடர்பில் நேரடியாகத் தலையீடு செய்வதில்லையெனவும் அது தொடர்பில் இலங்கை வங்கியாளர்களின் சங்கத்தின் மூலமும் வங்கிகளிடம் விசாரித்த போது கிரயம் அதிகரித்துள்ள காரணத்தால் தற்சமயம் அறவிடப்படுகின்ற வங்கி வரைவிற்கான கட்டணம் நியாயமானதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைகள் / கட்டளைகள்

அதேபோன்று கொடுப்பனவு செய்யப்படாத மறுக்கப்பட்ட காசோலைகளை அறவிட்டுக் கொள்வதற்காக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்து ஒரு மாத காலப்பகுதியினுள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு த.க.அ. / க.அ. அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை ஒரு மாதத்தின் பின்னர் மீண்டும் குழுவிற்கு அழைக்கப்படுமென செயற்குழுவினால் வலியுறுத்தப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்திற்கு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும், இந்த முறைமையுடன் தொடர்புடைய மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் அலவலர்கள் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமையை நடைமுறைப்படுத்துகின்ற அலுவலர்களையும் அழைப்பதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

- காசாக, வங்கி வரைவு மூலம் மற்றும் இணைய வழி முறைமை மூலம் வரி செலுத்துவதற்கு மேலதிகமாக காசோலை மூலம் வரி செலுத்தும் போது காசோலைகள் மறுக்கப்படுதல் அதிகரிப்புக் காரணமாக காசோலைகள் மூலம் வரி செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் இடைநிறுத்தல் மற்றும் வங்கி வரைவு மூலம் செலுத்துதல் தொடர்பில் அனுமதி கோரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களால் 2023/10/03 ஆம் திகதிய நிதி பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதோடு திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் மற்றும் அரச நிதிக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- 2023/05/25 ஆம் திகதி சட்டமா அதிபர் அவர்களிடம் செய்யப்பட்ட விசாரணைக்குக் கிடைத்த பதில் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் சட்டப் பிரிவினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- அனைத்து மறுக்கப்பட்ட காசோலைகளுக்காகவும் கொடுப்பனவு செய்தல் தொடர்பான விசாரணை மற்றும் ஏற்கனவே கொடுப்பனவு செய்திருப்பின் அது தொடர்பான ஆவணங்களோடு அறிவிக்குமாறு தெரிவித்து பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட கடிதமொன்றை வரி செலுத்துநர்களுக்கு அனுப்பி வைக்குமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களினால் 2023/09/27 ஆம் திகதி மறுக்கப்பட்ட காசோலைகளை நிறுவகிக்கின்ற அனைத்துப் பரிவுகளினதும் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு அதற்கமைய கடிதங்களை விநியோகித்தல் அலுவல்கள் தற்சமயம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- அந்த மறுக்கப்பட்ட காசோலைகளை அறவிட்டுக் கொள்ளல் தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களுக்கு எவ்விதமான பதிலளிப்புக்களும் கிடைக்கப்பெறவில்லையெனில் அல்லது மீளக் கிடைக்கப்பெறின் அதற்காக பின்வரும் நடவடிக்கைகளை பின்பற்றியொழுகுமாறும் மற்றும் குறித்த விசாரணை அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறும் பிரிவுகளுக்குப் பொறுப்பான ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

<u>அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் மீளக் கிடைத்திருப்பின்</u>

I. முறைமையினுள் வேறு முகவரியொன்று அல்லது தொலைபேசி இலக்கமொன்று உள்ளதா எனப் பரீட்சித்தல் .

II. தொலைபேசியூடாக வரி செலுத்துநர்களுடன் தொடர்பு கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

III. வேறு முகவரியொன்றை தேடிக்கொள்ள முடியுமெனில் அந்த இரண்டாவது முகவரிக்கு கடிதமொன்றை மீண்டும் அஞ்சல் மூலம் அனுப்புதல்.

<u>அனுப்பி வைக்கப்பட்ட முதலாவது மற்றும் இரண்டாவது கடிதங்கள் இரண்டும் மீளக் கிடைத்திருப்பின்</u>

I. கிராம அலுவலர் மூலம் விசாரித்தல்

		II. அஞ்சல் அலுவலகம் மூலம் விசாரித்தல் III. களப் பரிசீலனையொன்றை மேற்கொள்ளல் இந்த வழிமுறைகளைப் பின்பற்றியொழுகி 2023/12/31 ஆம் திகதியாகும் போது மறுக்கப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கையை 3,174 வரை குறைக்கப்பட்டுள்ளது. • காசோலை மூலம் வரி செலுத்துதல் தொடர்பாக வரி செலுத்துநர்களை அறிவுறுத்த வேண்டிய முறை தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களால் திணைக்கள அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். • மூன்றுக்கு மேற்பட்ட காசோலைகள் மறுக்கப்பட்டுள்ள வரி செலுத்துநர்களை கரைநிரல் பட்டியல்படுத்தி 2019 ஒக்தோபர் மாதம் தொடக்கம் திணைக்களத்தின் உள்ளக வலையமைப்பில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளதோடு திணைக்களத்தின் இணைய தளத்தில் பிரசுரிப்பதற்கான சாத்தியப்பாடு தொடர்பாகவும் ஆரயப்பட்டு வருகின்றது. • காசோலைகள் தீர்வு செய்யப்பட்ட பின்னர் மாத்திரம் திணைக்கள முறைமைக்கு கொடுப்பனவு வழங்க இலங்கை வங்கியினால் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. • மேலே 3.9ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மறுக்கப்பட்ட கொடுப்பனவுகளை முறைமைக்குப் பெற்றுக் கொள்ளல் வேலை விடயங்களை உருவாக்குதல் குறித்த எழுத்தாவணங்களை வரி செலுத்துநர்களுக்கு அனுப்புதல் மற்றும் அவற்றுக்குரிய அறிக்கைகளை உருவாக்கிக் கொள்வதற்காக திணைக்கள முறைமையை விருத்தி செய்ய வேண்டியுள்ளதால் RAMIS உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற NCS நிறுவனத்திற்கு அது தொடர்பாக அறிவித்தல். • இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன காசோலைகள் தீர்வு செய்யப்பட்ட பின்னர் மாத்திரம் முறைமைக்கு கொடுப்பனவு வழங்கப்படுவதால் முன்னரைப் போன்று காசோலை வங்கிக்கு வழங்கப்பட்ட தினத்திலேயே முறைமைக்கு கொடுப்பனவு செய்யப்பட்டதாக கருதப்படுவதில்லையெனவும் மற்றும் தாமதக்கொடுப்பனவு மீது குறித்த தண்டம் விதிக்கப்பட முடியும் எனவும் வரி செலுத்துநர்களை அறிவுறுத்தேவதற்கான அறிவித்தல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

2023/12/31 **ஆம் திகதியில் முன்னேற்றம்**

குறித்த 5 அரச நிறுவனங்களினால் செய்யப்பட்ட VAT கொடுப்பனவு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்தல் தொடர்பாகச் செய்யப்பட்ட கணக்காய்வு விசாரணைக்குக் கிடைக்கப்பெற்ற பதில்களுக்கு அமைய 2023/12/31 ஆம் திகதி வரை குறித்த வரி செலுத்துநர்கள் VAT வரித் தொகையை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் முன்னேற்றம் பின்வருமாறு

	Quarry No.	**VAT பெறுமதி (ரூபா)**	**VAT சேகரிக்கப்பட்ட தொகை (ரூபா)**	**VAT இற்காக மதிப்பீடு விநியோகிக்கப் பட்ட தொகை (ரூபா)**	**கணக்காய்வுஆரம்பிக்கப்பட்டுள்ள தொகை (ரூபா)**	**நீக்கப்பட்ட வரி**	**தவறான பற்றுச் சீட்டுத் தகவல்கள்**	**வேலை விடயம் ஆரம்பிக்கப் பட்டுள்ள**
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்	PUR/D/IRD/2021/AQ/26	2,031,445.64	1,119,673.76	56,859.69	743,605.00	43,803.89		
மத்திய பொறியியல் மதியுரைப் பணியகம்	PUR/D/IRD/2021/AQ/30	10,939,806.00	44,135,475.53	87,455,980.00	1,204,610.09			
காணி மீட்பு மற்றும் அபிவிருத்திச் சேவை (தனியார்) கம்பனி	PUR/D/IRD/2021/AQ/31	7,546,338.00	4,219,880.00	45,116.10	49,306.42		178,530.65	
காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் அதிகார சபை	PUR/D/IRD/2021/AQ/33	130,352,827.00	73,191,001.00	54,181,723.59	19,148,175.00			
வீதி அபிவிருத்திச் சபை	PUR/D/IRD/2021/AQ/34	41,221,000.74	3,135,325.63	3,682,094.17	3,609,791.68			13,616,379.15
மொத்தம்		**192,091,417.38**	**125,801,355.92**	**145,364,913.86**	**24,755,488.19**		**178,530.65**	**13,616,379.15**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் :- 77
நிறுவனத்தின் பெயர் :- உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
விசாரணை செய்யப்பட்ட திகதி :- 2023 /01/24

	அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	நிறுவனத்தினால் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை.
01	<u>**சேவை ஒப்பந்தத்தைக் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்காமை**</u> உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) மற்றும் சிங்கப்பூர் கம்பனிக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட சேவை ஒப்பந்தம் கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் கோரப்பட்ட சந்தர்ப்பத்தின் போது ஒப்பந்தத்திற்குரிய ஏனைய தரப்பினரின் எழுத்து மூல அனுமதியின்றி ஒப்பந்தத் தகவல்களை மூன்றாம் தரப்பொன்றுக்கு வழங்க முடியாதெனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் இரகசியத் தன்மைக்குரிய பிரிவொன்று உள்ளடக்கப் பட்டுள்ளதெனத் தெரிவித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அந்தச் சேவை ஒப்பந்தத்தை வழங்குவதை நிராகரித்திருந்தமை. அரசியல் அமைப்பின் 154(05) (இ) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைக்குரிய தேவையான அனைத்து எழுத்தாவணங்களையும் கோருவதற்கு கணக்காய்வாளருக்கு அதிகாரம் உள்ளதெனவும், தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6(3) பிரிவின் விதிகளுக்கமையவும் கணக்காய்வாளருக்கு அவ்வாறான அதிகாரமொன்று கையளிக்கப்பட்டுள்ளதெனவும் சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த அலுவலர் தெரிவித்தார். அதற்கமைய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பு மற்றும் நியதிச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஆவணங்களைக் கோருவதற்கு கணக்காய்வாளருக்கு தெளிவான அடிப்படையில் சட்ட அதிகாரம் உள்ளதென குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோடு கணக்காய்வாளரின் கோரிக்கைக்கு இணங்காமை தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைய தவறொன்றாகுமென இனங்காணப்படுவதாக இங்கு வெளிப்படுத்தப்பட்டது. குறித்த சிங்கப்பூர் கம்பனி மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள சேவை ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீறப்படின் ஒப்பந்தத்தை மீறியமை தொடர்பில் சிங்கப்பூர் கம்பனியினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக இங்கு கருத்துத் தெரிவித்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் அலவலகர் மேலும்	சட்டமா அதிபரின் அனுமதி சகிதம் சிங்கப்பூர் கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளுக்கமைய வேறு மூன்றாம் தரப்பொன்றுக்கு RAMIS கணனி முறைக்குரிய எழுத்தாவணங்கள் அல்லது தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்காக சிங்கப்பூர் கம்பனியிடமிருந்து எழுத்து மூல அனுமதி கிடைக்கவில்லையென்பதால் குறித்த ஒப்பந்ததின் பிரதியை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்க முடியவில்லை. அவ்வாறு வழங்குவது ஒப்பந்த நிபந்தனைகளை மீறுவதாகும் என்பதோடு அது தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கெதிராக சிங்கப்பூர் கம்பனியினால் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்களின் உசாவுதலுக்குப் பதிலாக சட்டமா அதிபரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. • உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் CGIR /2022/28 ஆம் இலக்க 2022/08/08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட உசாவுதலுக்கான பதிலாக, சட்டமாதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் (சாயா சிறி நம்முணி) அவர்களின் 2023.01.30ஆம் திகதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "Given that the Singapore company has refused to give consent to disclosure as stated above, the possibility that such company may institute legal action does exist. The dispute resolution clause provides for arbitration in Hong Kong"

	குறிப்பிட்டார்.	
02	<u>**சேவை ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதற்கு முன்னர் சேவை ஒப்பந்த நிபந்தனைகள் சட்டமா அதிபர் அவர்களால் தீர்வுசெய்யப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.**</u> 2014 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட 35 மில்லியன் சிங்கப்பூர் டொலர் பெறுமதி கொண்ட பிரதான ஒப்பந்தத்திற்குச் சட்டமா அதிபரின் அனுமதி பெறப்பட்டுள்ளதென இங்கு வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக RAMIS இன் அடுத்த கட்டமான RAMIS 2.0 விருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட சேவை ஒப்பந்தத்தின் பெறுமதி சிங்ப்பூர் டொலர் 15.5 மில்லியன் எனத் வெளிப்படுத்தப்பட்டதோடு அந்த சேவை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இரகசியத் தன்மைக்குரிய பிரிவு காரணமாக சேவை ஒப்பந்தின் பிரதியொன்று சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் ஒப்பந்தத்தின் சில பகுதிகளுக்குரிய தகவல்கள் மாத்திரம் பரிமாறப்பட்டதாகவும் மேலும் வெளிப்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தின் தகவல்களை பரிமாற முடியாமைக்கு காரணமான அவ்வாறான பிரிவொன்றை உட்சேர்ப்பதன் தேவைப்பாடு குழுவினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலரிடம் விசாரிக்கப்பட்டதோடு இதனை தெளிவுபடுத்திக் கொள்ளல் தொடர்பில் குறித்த தரப்புடன் கலந்துரையாடப்பட்டதா என்பது தொடர்பாகவும் மேலும் விசாரிக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அவர்களால் இது தொடர்பில் சிங்கப்பூர் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளருடன் கலந்துரையாடப் பட்டதாக க.அ. தெரிவித்ததோடு அதன்போது கணக்காய்வாளருக்கு ஒப்பந்தப் பிரதியை வழங்க அவர்கள் இணங்கவில்லையெனவும் தெரிவித்தார். கொடுப்பனவு தொடர்பில் ஒப்பந்தப் பிரிவுகள் ஏற்கனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மீறப்பட்டுள்ளதால் வேறு பிரிவொன்று மீறப்படுமாயின் சிக்கலொன்று ஏற்பட முடியுமெனவும் கணக்கீட்டு அலுவலர் மேலும் தெரிவித்தார்.	RAMIS கருத்திட்டம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அதற்காக சட்டமா அதிபரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.
03	<u>**RAMIS கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை**</u> இறுதிக் கொடுப்பனவின் பின்னர் RAMIS கருத்திட்டத்தின் உரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரித்தாகுமெனவும் RAMIS இன் அடுத்த கட்டமான RAMIS 2.0 இன் மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் முறைமையின் பராமரிப்பு அலுவல்கள் சிங்கப்பூர் கம்பனியினால்	RAMIS முறைமை தற்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிறுவகிக்கப்பட்டு வருகின்ற SSCL (சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி) மற்றும் B & GL (பந்தைய மற்றும் சூதாட்ட வரி) தவிர்ந்த அனைத்து வரிவகைகளின் நிருவாகத்திற்காகவும் தயாரிக்கப்பட்டு

	மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் க.அ.தெரிவித்தார். RAMIS 2.0 இற்கான சிங்கப்பூர் டொலர் 15.5 மில்லியனில் 6 மில்லியன் டொலர்கள் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளதாகவும் மீதித் தொகையான 9.5 மில்லியன் சிங்கப்பூர் டொலர் அவர்களுக்கு செலுத்தவேண்டியுள்ளதாகவும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது. முறைமைக்காக மூன்றாம் தரப்பொன்று மீளாய்வாளராக இருக்கவேண்டுமென ஆரம்ப ஒப்பந்தத்தில் பிரிவொன்று உள்ளடக்கப் பட்டிருந்தமையால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் RAMIS முறைமைக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மதியுரைச் சேவை வழங்கப்படுவதாக மொரட்டுவைப் பல்கலைக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுகின்ற அலுவலர் தெரிவித்தார். மனித மூலதனப் பிரச்சனை மற்றும் சேவை வழங்குகின்ற / கீழ் கட்டுமானப் பிரச்சனை சுட்டிக்காட்டி அவர்கள் தொடர்ந்தும் உசாவியது யாதெனில், RAMIS இன் முழு உபயோகத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக இரண்டு துறைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதாகும். அதாவது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் உள்ளக விருத்தி குழுவொன்று உள்ளதா எனவும் மற்றும் இரண்டாவதாக வரி விதிப்புக்களத்தினுள் (Taxation Domain) உள்நாட்டு சேவை வழங்குநர்களை தேடிக்கொள்வது சவால் நிறைந்தது என்பதால் களத்தில் சிறப்புத் தன்மையைப் பெற்றுக்கொள்ள திறைமையான உள்நாட்டுச்சேவை வழங்குநர் ஒருவர் உள்ளாரா என்பதாகும்.	நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. SSCL, RAMIS முறைமையினுள் தாபித்தல் அபிவிருத்திப் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள Invoice களுக்காக அனைத்துக் கொடுப்பனவுகளும் செய்யப்பட்டுள்ளன. RAMIS முறைமையின் குறைபாடுகள் மற்றும் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையொன்று நிதியமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதோடு அது தொடர்பான தேவையான அலுவல்கள் நிதியமைச்சின் தலையீட்டின் மீது எதிர்காலத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கின்றேன்.
04	**<u>RAMIS கருத்திட்டத்திற்கான பயிற்ப்பட்ட அலுவலகர்கள்</u>** RAMIS கருத்திட்டத்திற்குரிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணியாட்குழு உறுப்பினர்களில் 90 பேர் வரை ஏற்கனவே பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் அரச துறையின் சம்பள அளவுத்திட்டம் ஒப்பீட்டளவில் மிகக் குறைவு என்பதால் தகவல் தொடர்பாடல் தொழிற் நுட்ப நிபுணர்களின் சேவையைப்பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்படுவதாக குழுவினால் அவதானிக்கப்பட்டது. உள்நாட்டு மற்றும் சர்வதேச அடிப்படையில் மென்பொருள் முறைமைகளை உருவாக்கின்ற திறைமையான மென்பொருள் கம்பனிகள் இலங்கையினுள் காணப்படுகின்றமையினால்	வரி அலுவல்களுக்காக சிறப்பான அலுவலகர்களை திணைக்களத்திலிருந்து தேடிக்கொள்ள முடியும் எனினும், தகவல்தொடர்பாடல் தொழில்நுட்ப நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்படுகிறது. நிதியமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள்

	அந்தச் சேவைகளை வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளும் சாத்தியப்பாடு காணப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டது.	எடுக்கப்படுமென எதிர்பார்க்கின்றேன்.
05	**<u>வரி நிருவாகத்திற்கான புதிய உலகளாவி துவக்க முயற்சி</u>** வரி நிருவாகத்தின் புதிய தொழில்நுட்ப துவக்க முயற்சியை நோக்கிச் சில நாடுகள் ஏற்கனவே பயணித்துக்கொண்டிருப்பதாக தகவல் தொழில்நுட்பத் துறையைப் பிரதிநிதி நிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த அலுவலரினால் சுட்டிக்காட்டப்பட்டது. உதாரணமாக – ஐக்கிய இராச்சியத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வரி டிஜிட்டல் மயமாக்கல் (Making Text Digital) (MTD) ஊடாக முறைமையில் ஆரம்ப API தயாரிப்பதற்காக மாத்திரம் அரசு ஆகக் குறைந்த தொகையொன்றைச் செலவிட்டுள்ளது. இதற்குமேலதிகமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வேறு அரச நிறுவனங்களின் முறைமைகளுடன் இணைந்து கொள்வதற்கு அவசியமெனில் முறைமையைத் திட்டமிடும் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் API வேறு முறைமைகளில் உட்சேர்க்க (Written) வேண்டுமென இங்கு வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னர் அரச நிறுவனங்களிற்கிடையே கூட்டங்களுக்காக வசதிகளைச் செய்கின்ற அமைச்சிக்களுக்கிடையில் குழுவொன்று காணப்பட்டதாகவும் அது கடந்த காலத்தில் கூடவில்லையெனவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தை (ICTA) பிரதிநிதித்துவம் செய்கின்ற அலுவலர் தெரிவித்தார். **பரிந்துரைகள் / கட்டளைகள்** RAMIS முறைமையைச் சரியாக மதிப்பீடு செய்தல் மற்றும் கணீப்பீடு செய்வதற்காக இரண்டு தொழில்நுட்பக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் பின்வருமாறு RAMIS முறைமையை சரியாக நடைமுறைப்படுத்தும் வழிகளை இனங்காண்பதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. • தொழில்நுட்பக் குழு 01 – தொழில்நுட்பம் மற்றும் தொடர்டபுடைய பிரச்சனைகளைத் தீர்த்தல் மற்றும் RAMIS மேம்படுத்துவதற்குரிய பரிந்துரை முன்வைத்தல். **குறித்த பதிலறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** மேற்படி தொழில்நுட்பக் குழு – 01 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) தலைவரினால் ஒருங்கிணைப்புச் செய்யுமாறும் அதற்காக நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (கணனி / தகவல் தொழில் நுட்பப் பிரிவின் தலைவர், RAMIS கருத்திட்ட பணிப்பாளர் உள்ளடங்கலாக) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம், மொரட்டுவை பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவம்	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் RAMIS முறைமைக்கு Web ஊடாக தகவல்களை வழங்கக்கூடியவாறு முறைமையை விருத்தி செய்யவேண்டும் என்பதோடு அந்த தரங்களுக்கமைய தரவுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். உதாரணமாக - நபர் ஒருவரெனில் NIC இலக்கமும் கம்பனியொன்றெனில் கம்பனியின் பதிவு இலக்கமும் என்றவாறு அடையாள இலக்கம் ஒன்று (Unique Number) அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.

	செய்கின்ற அலுவலர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் நிபுணர்களை இணைத்துக் கொள்ளுமாறும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) தலைவருக்கு குழுவினால் உத்தரவிடப்பட்டது. மேலும் வரிச் சட்டங்களின் திருத்தங்களுடன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து RAMIS இன் வினைத்திறனை மேம்படுத்தல் மற்றும் பயன்பாட்டை உச்சப்படுத்துவதற்காக அவர்களின் முன்மொழிவு மற்றும் திட்டங்களாக காலச்சட்டகம் சகிதம் ஆறு வார காலத்தினுள் சமர்ப்பிக்குமாறு குழுவினால் தொழில் நுட்பக்குழு -01 இற்கு உத்தரவிடப்பட்டது. • தொழில்நுட்பக் குழு 02 – முறைமையை மேம்படுத்துவதற்காக் காணப்படுகின்ற சட்டரீதியான சட்டகத்தினுள் RAMIS மாற்றம் செய்தல் சாத்தியப்பாட்டை கண்டறிவதற்கு. நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் தலைமையில் மற்றும் ஒருங்கிணைப்பில் மற்றும் நிதியமைச்சு பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் உரிய அலுவலர்களை உள்ளடக்கிய மேற்படி தொழில்நுட்பக் குழு – 02 ஐ தாபிப்பதற்கு குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலும் மேற்படி தொழில்நுட்பக் குழு -01 இற்கு அவர்களின் முன்மொழிவு / திட்டங்களை மேற் கொள்ளும் சாத்தியப்பாட்டை ஆராய்ந்து பார்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சிங்கப்பூர் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்த்திற்கமைய RAMIS மாற்றம் செய்தல் சாத்தியப்பாடு தொடர்பாக சட்டரீதியான அபிப்பிராயம் மற்றும் பகுப்பாய்வொன்றை சமர்ப்பிக்குமாறு குழுவினால் தொழில்நுட்பக் குழு -02 இற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.	

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 77 இற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவதானிப்புகள் பற்றிய தகவல்களை மேற்குறிப்பிட்டவாறு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஒப்பம்
பணிப்பாளர் நாயகம்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்